பெண்ணிய நோக்கில் கருவாச்சி காவியம்

சி. ஜாய்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக்கல்லூரி, மார்த்தாண்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முனைவர் எஸ். அலக்ஸ் ஜேக்கப்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக்கல்லூரி, மார்த்தாண்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஆய்வுச்சுருக்கம்
புதினம் என்னும் இலக்கியத்தளத்தில் தன் அடையாளத்தைத் தக்கவைத்துக் கொண்டவர் வைரமுத்து. தான் பிறந்து வளர்ந்த சுற்றுப்புற மக்களின் வாழ்வியலை புதினங்களாக்கியமை அவருடைய தனிச்சிறப்பு. கருவாச்சிக் காவியம் ஒரு கிராமத்துப் பெண்ணின் தைரியமான வாழ்க்கைப் போராட்டத்தைச் சொல்லும் நாவல். திருமணமான பதினொன்று நாட்களிலேயே கணவனால் கைவிடப்படும் 'கருவாச்சி' பரம்பரைப்பகை, சமூகச்சூழல் மற்றும் தனித்து வாழும் பெண்ணுக்கு ஏற்படும் இன்னல்களைக் கடந்து, தன் வாழ்வை எப்படி தைரியமுடன் எதிர்கொள்கிறாள் என்பதை ஆய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.
கலைச்சொற்கள்: திருமணம், தாலி, பிரசவம், போராட்டம், மனவலிமை, தனித்தன்மை.

முன்னுரை

கருவாச்சி காவியம் வைரமுத்து அவர்களால் எழுதப்பட்டு 2007-ஆம் ஆண்டு வெளிவந்த புதினம் ஆகும். இது முழுக்க முழுக்க கிராமத்துப் பின்னணியில் உருவாக்கப்பட்ட ஒரு புனைவு கதையாகும். ஒரு சாதாரண பெண்ணின் வாழ்வில் நடக்கும் போராட்டம் அவளின் வலிகள், கண்ணீர், தனக்குத்தானே பிரசவம் பார்க்கும் நிலை என அனைத்தையும் ஆசிரியர் இந்நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களுக்கான சமூக, அரசியல், பொருளாதார மற்றும் தனிப்பட்ட சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு கொள்கை மற்றும் இயக்கமாகும். இது ஆணாதிக்க சமூக அமைப்பை எதிர்த்து கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சொத்துரிமை ஆகியவற்றில் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான சம உரிமைகள் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டது.

சுருக்கமாக பெண்களைத் தாழ்வாக நடத்தும் கலாச்சார மற்றும் சமூக நடைமுறைகளை எதிர்த்து, அவர்களின் தனித்துவமான உரிமைகளை நிலை நாட்டுவதே பெண்ணியத்தின் அடிப்படை நோக்கமாகும்.

காவியமான கருவாச்சி

தனியொருத்தியைக் காப்பிய தலைவியாகக் கொண்டு, படைப்பிலக்கியம் செய்வது தமிழுக்குப் புதியதன்று. ஆனால் பெண்ணியம், பெண் விடுதலை ஆகியவற்றின் முழுப்பரிமாணத்தையும், நடப்பியல் சிக்கலோடு, மானுடத்தின் மகுடமாகச் சித்தரிப்பதில் தனியிடம் வகிப்பது ''கருவாச்சி காவியம்'' ஆகும்.

மானுடம் என்பது பல்வகைப் பலவீனங்களின் தொகுப்பு என்பதைப் புரிந்துக் கொண்டு நடத்தப்படும் குடும்ப வாழ்வை இல்லறமாக

மாற்றிக்காட்டியவள் கருவாச்சி. ''ஜாதி மத இன பாலின பாகுபாடுகளைத் தாண்டி மனித உணர்வுகளைப் பொதுவானதாக ஏற்று கொள்ளாத எந்த ஒரு சமூகத்திடமிருந்து பெண்களுக்கு கிடைக்கும் வாழ்க்கை ரொம்பவே அநீதியானது'' (சல்மா- இரண்டாம் ஜாமங்களின் கதை, ப.1) என்று சல்மா தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். இங்கே சடையத்தேவர் தன் அண்ணன் மாறு கண்ணுத்தேவர் மகள் சொர்ணக்கிளியின் கொடுமையான மரணத்திற்கு பெரிய முக்கியின் உறவுக்காரன் செயில்ராசு காரணமானான். அதற்கும் பெரியமுக்கி மகள் கருவாச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றாலும் பழிவாங்கும் நோக்கத்துடன் தனது மகன் கட்டையனுக்கு கருவாச்சியைக் கட்டிச் சீரழித்தார் சடையத்தேவர். சீரழித்த தன் வாழ்வையும், தன்னோடு ஒட்டிய தன் மகன் அழகுசிங்கத்தையும் காப்பாற்றும் மிகப்பெரிய பொறுப்பில் வாழ்க்கையைக் கொண்டு செலுத்தும் கருவாச்சி இறுதியாக தான் அனுபவித்த கொடுமைகளுக்கெல்லாம் காரணமான கட்டையனுக்கும் கஞ்சி ஊற்றுகிறாள். கதைப் பயணத்தொடக்கத்தில் அப்பாவியாகத் தோன்றும் அவள், நாவலின் இறுதியில் ஞானிக்கும் ஞானியாவதாக ஆசிரியர் படைத்துள்ளார்.

ஏமாற்றப்படல்

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். ஆனால் கருவாச்சியின் திருமணமோ, பழிவாங்கும் நோக்கில் நடத்தப்பட்டது.

''அப்பவே எம் புத்திக்குள்ள கவுளி கத்துச்சு சடையத்தேவன் குடும்பத்துக்கும், பெரிமுக்கி குடும்பத்துக்கும் நாற்பது வருசப் பகையாச்சே'' நல்லது கெட்டதுக்கே வாரதில்லயே தண்ணி மண்ணி பொழங்கறதில்லையேகட்டையன்கருவாச்சி கல்யாணத்துக்குப் பெறகாவது ரெண்டு குடும்பமும் கை நனைக்கட்டுமேன்னு தான் சாதிசனமெல்லாம் நெனச்சு'' (க.கா.ப.14) என்று குறிப்பிடுவதிலிருந்தும்,

''சுபரம்பரைக்குண்டான பழிதீர்ந்தடா மகனே'' (க.கா.ப.20) என்னும் சடையத் தேவரின் வாக்கின் மூலமாகவும் இதனை அறிய முடிகின்றது.

பாலியல் வன்முறை

பெண்களின் வாழ்க்கை நிலையில் அன்றாடம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குகிறவர்களாகக் காணப்படுகின்றனர்.

''எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும், பெருமையும் இருக்கின்றதோ அந்நாடு முன்னேற்றம்பெற்றநாடாகும்'' பெண்மைக்கு சிறுமையும், இழிவும் கற்பிக்கும் நாடு அடிமை நாடு அல்லது பிற்போக்கான நாடாகும்'' (எல்.கே. அக்னிபுத்ரன் - செம்மொழி இலக்கியமும், கோட்பாடும், ப.71) என்று டாக்டர் மு.வ. குறிப்பிடுகின்றார்.

கருவாச்சியை திருமணம் செய்த கட்டையன், அவளுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பும், மரியாதையும் அன்பும் கொடுக்காமல், அவளை துன்புறுத்துவதைக் காணலாம்.

''கல்யாணமான ரெண்டாம் நாளு..... உச்சி வெயிலு, சும்மா கொதிக்குது பாறை முடிஞ்சு பாத்தா வெந்து கெடக்கு அவ முதுகுத்தோலு'' (க.பா.ப.26)

தன் மனைவி என்றும் பார்க்காமல், உச்சி வெயில் கருவாச்சியை சீரழித்தான் கட்டையன். அதுமட்டுமல்லாமல்,

''மூணாம் நாளு..... கெணத்துக்குள்ள எறக்கி... புதுக்கயிறு பிரி ஒண்ணும் தேயக் கடைசில அவ கையைப் பார்த்தா உள்ளங்கை ரெண்டும் மருதாணி வச்சமாதிரி கொதகொதண்ணு கெடக்கு.''

(க.கா.ப.27)

என்று கட்டையன், சொல்வதிலிருந்து கருவாச்சியை அவன் துன்புறுத்தி பழிவாங்குவதை நாம் காணமுடிகின்றது.

கைவிடப்படல்

''உடல் தேவை என்னும் சாம்பல் உதிர்ந்த பிறகு தான் உள்ளிருக்கும் அன்பின்

சங்கு துலக்கமாகிறது.'' (க.இ.ப.120) என்று கள்ளிக்காட்டு இதிகாசத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கருவாச்சியின் வாழ்க்கை தலைகீழாக மாறியது. திருமணம் முடிந்து பதினொராவது நாளில் பஞ்சாயத்தைக் கூட்டினான் கருவாச்சியின் கணவன் கட்டையன்.

''ஏம்மா கருவாச்சி! ஒம் புருஷன் கட்டையன் ஒன்னியப்பத்தி அதுஇதுண்ணு சொல்லி அத்து விட்ருங்கங்கறான்...'' (க.கா.ப.19) என்று சொல்லுவதிலிருந்து இதனை அறியலாம். பழிவாங்குவதற்காக கருவாச்சியை திருமணம் செய்து அவளை ஒதுக்கிவிட்டான் கட்டையன்.

கருவாச்சியின் எழுச்சி

தென்றல் புயலாவது போன்று, ஆண் அதிகாரத்தில் அடங்கியிருந்த ஒரு பெண் வைகுண்டெழுவது போல், கருவாச்சி காவியத்தில் ''கருவாச்சி'' வீறு கொண்டு எழுவதைக் காணமுடிகிறது.

''அவ ஒரு முடிவுக்கு வந்திட்டா...'' (க.கா.ப. 46) என்று குறிப்பிடுவதிலிருந்து கருவாச்சி தெளிவுபெற்று விட்டாள் என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமன்றி, இப்போது கருவாச்சியிடம் பயம் இல்லை. இதனை, ''எம் மேல ஒரு குற்றமும் இல்லீங்க, இது பஞ்சாயத்துக்கும் தெரியும், நாங்கும்புடற சாமிக்குந் தெரியும். மற்றபடி ஊரும் என்ன தீர்ப்புச் சொல்லுதோ கட்டுப்படறேன்.'' (க.கா.ப.48) என்று கருவாச்சி கூறுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஆண் துணையில்லாமல் ஒரு பெண்ணால் வாழ முடியாது என்று ஆணவம் காட்டிய கட்டையனிடம் ''பொழைக்கிறேன்.... பொழைச் சுக்காட்டுறேன்'' (க.கா.ப.52) என்று சவால் விட்டாள் கருவாச்சி. இதிலிருந்து ஒடுக்குதல்களிலிருந்து மீண்டெழுந்த பெண்ணின் மன வலிமை புலப்படுகிறது.

பிரசவம் என்பது ஒவ்வொரு பெண்ணும் செத்துப் பிழைக்கும் அனுபவம் போன்றது. கருவாச்சி காவியத்தில், கருவாச்சிக்கு அது பிரசவ காலம் தாய், தந்தையை இழந்த அவளுக்கு வேறு யாருமில்லை. காட்டு வேலைக்குச் சென்ற கருவாச்சிக்கு, பிரசவ வலி ஏற்படுகிறது. அங்கு யாரும் கூட இல்லை என்பதை

''ஒத்தையில நிக்கிறா கருவாச்சி, அத்துவனங் காட்டுல, ..., எடுத்திருச்சய்யா இடுப்புவலி'' (க.கா.ப.128) இதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

யாரும் துணையில்லை என்று வரும் போது கடவுளைத் தேடுவது மனித இயல்பு. கருவாச்சியும்,

''கடவுளே என்னியக் காப்பாத்திரு, தாயும் பிள்ளையும் தனித்தனின்ணு ஆக்கிரு.'' (க.கா.ப.130) என்று வேண்டினாள். தனக்குத் தானே பிரசவம் பார்த்த நிகழ்வை,

''ஆதியிலேயே அப்பன் இல்ல, இப்ப ஆத்தாளுமில்ல. உள்ளங்கையில அடுப்புக்கூட்டி ஒருத்தியாக் கஞ்சி காச்சிறமாதிரி, ஒத்தையில பிள்ளை பெத்து ஒண்ணும் நடக்காத மாதிரி நடந்து வந்திட்டளப்பா'' (க.கா.ப.135)

என்னும் வரிகளினூடாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சவால் போடுவது முக்கியமல்ல அதனை ஜெயிப்பதற்காக முழுமுயற்சி மேற்கொள்ள வேண்டும். கருவாச்சி காவியத்தில் காவியத் தலைவி கருவாச்சி முழு முயற்சியோடு சவாலை ஜெயித்தும் காட்டினாள். இதனை, ''இந்தா போறா பாரு இவதாண்டா பொம்பள'' ன்னு ''கடபுட, சடபுட'' ன்னு கைதட்டுது ஆகாயம்'' (க.கா.ப.134) என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் 37 வருடம் கழித்து கட்டையன் கருவாச்சியை அழைத்து மன்னிப்பும் கேட்கிறான். இதை ''என்னிய மன்னிச்சிரு தாயி..... என்னிய மன்னிச்சிரு, எம்பாவத்த சொல்லியழுக சாமியக் கூப்பிட்டழுதேன்'' வரமாட்டேன்ருச்சு ''நீ வந்திட்ட ஒன்னிய நான் படுத்துன கருமாயத்துக்கு என் ரத்தத்தை ஊத்தி ஒன் கால் ரெண்டையும் கழுவணுமடியாத்தா...'' (க.கா.ப.330) என்னும் வரிகள் பதிவு

செய்துள்ளன. இவ்வாறு தன்னைக் கொடுமைப்படுத்திய கணவனையே கருவாச்சி நன்னெறிப்படுத்தினாள் என்பதையும் அறிய முடிகிறது.

ஆய்வு நிறைவுரை

கருவாச்சி காவியம் ஒரு கிராமத்துப் பெண்ணின் வலிமை, தன்னம்பிக்கை மற்றும் ஆணாதிக்க சமூகத்தின் சவால்களை எதிர்கொள்ளும் போராட்டத்தை வெளிப்படுத்தும் பெண்ணியப் படைப்பாகும்.

கருவாச்சியின் தன்னந்தனியான பிரசவப் போராட்டம், துரோகங்கள் மற்றும் மன உறுதியுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் விதம் பெண்ணின் உளவியல் மற்றும் உடல் சார்ந்த வலிமையை ஆழமாகப் பேசுகிறது கருவாச்சி காவியம்.

சமூகத்தின் சாதி மற்றும் ஆணாதிக்க கட்டமைப்புகளுக்கு எதிராக, சமூகத்தின் பார்வைகளைத் தகர்த்து தன் தனித்துவத்தை நிலைநிறுத்துகிறாள் கருவாச்சி.

இக்காவியம் பெண்ணை வெறும் பாலியல் அடையாளமாகப் பார்க்காமல், ஒரு ஆளுமை மிக்க பாத்திரமாக, எத்தகைய சூழ்நிலையிலும் நிலைத்து நிற்கும் உறுதியுடன் படைத்துள்ளது.

கருவாச்சி காவியம் பெண்ணியச் சிந்தனைகளை யதார்த்தமான கிராமியச் சூழலில், வலிமையான மொழியில் பதிவு செய்துள்ள ஒரு இலக்கிய படைப்பாகும்.

கிராமிய வாழ்வின் யதார்த்தங்களுடன், பெண் மீதான சமூகப் பார்வைகள், சதிப்பின்னல்களைக் கடந்து, தன் வாழ்வை அவளே தீர்மானிக்கும் சுதந்திரம் பெண்ணியமாக முன்வைக்கப்படுகிறது.

துயரங்கள் இடிபோல் இறங்கினாலும், உடைந்து போகாமல் கருவாச்சி காட்டும் மன உறுதி பெண்ணியத்தின் முக்கிய அடையாளமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

கருவாச்சி காவியம் உடல் மற்றும் மனதளவிலும் திடமான ஒரு பெண்ணின் போராட்ட காவியமாகும் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

பார்வை நூற்கள்

1. எல்.கே. அக்னிபுத்ரன் - ''செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும்'' மாணிக்கவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை - 600 008. முதற்பதிப்பு - 2009.
2. சல்மா- ''இரண்டாம் ஜாமங்களின் கதை'' காலச்சுவடு பதிப்பகம்.
3. வைரமுத்து-''கருவாச்சிகாவியம்''சூர்யா வெளியீடு, டிரஸ்ட்புரம், சென்னை - 28. முதற்பதிப்பு - 2006.
4. வைரமுத்து-''கள்ளிக்காட்டு இதிகாசம்'' (2003 சாகித்ய அகாடமி விருது பெற்ற படைப்பு) சூர்யா லிட் ரேச்சர் (பி) லிமிடெட், சென்னை - 24. முதற்பதிப்பு - 2001.